
www.tamilarangam.net

# முழக்கம்

ஜூன் 1983 | வெளியீடு 3

GUES (U.K. Branch)
BM Box 2860
LONDON, WC1V 6XX



ஈழ விடுதலைப் போராளி சிவகுமாரன்

## ஈழ மாணவர் பொது மன்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எச்சரிக்கின்றோம்

ஈழ விடுதலைக்காகப் போராடும் சில தீவிரவாத இளைஞர்கள் சிறீலங்கா அரசின் ஆயுதப்படையினரில் சிலரைக் கொலை செய்ததால், ஆயுதப் படையினர் பல கிராமங்களையே அழித்தொழித்தனர். இதுவரை காலமும் சந்தைகள், வர்த்தக ஸ்தாபனங்கள், நூலகங்களை எரித்த இவர்கள் இன்று அப்பாவி மக்களின் வீடுகளையே அழித் தொழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். சிறீலங்கா எதேச்சதிகார அரசின் இத்திட்டமிட்ட செயலால் தமிழ் பேசும் மக்களின் பல கோடி சொத்துக்கள் கொள்ளை அடிக்கப்பட்டதுடன் அவர்கள் தமது சொந்தப் பூமியிலேயே அகதிகளாக்கப்படுகின்றார்கள்.

இவை போதாதென்று, அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, இதன்கீழ் இராணுவத்துக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சந்தேக நபர் என்ற போர்வையில் இராணுவத்தினர் அப்பாவி பொது மக்களை கொலை செய்ய அரசு வழி சமைத்துக்கொடுத்துள்ளது. கொலைசெய்யப்படுவோரை எதுவித விசாரணையுமின்றி அடக்கம் செய்ய பொலீசாருக்கும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. அமெரிக்க ஏவல் நாய்களின் பணிப்புரையின் பேரில் இப்படியான சட்டங்கள் "எல்சல்வடோர்","தென்னாபிரிக்கா" போன்ற நாடுகளில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் கைப் பொம்மையான ஜே ஆர். ஜயவர்த்தனா தானும் இந்நாடுகளுக்கு குறைந்தவன் அல்ல என்ற தனது எஜமான விசுவாசத்தை இதன் மூலம் ரீகனுக்கு உணர்த்தியுள்ளார்.

வன் முறையில் ஈடுபடுவதாக கருதப்படும் ஒரு சில இளைஞர்களை கைது செய்ய வக்கிலாத சிறீலங்கா எதேச்சதிகார அரசு, மக்களை மிரட்டி துன்புறுத்துவதன் மூலம் ஈழ விடுதலைக் கோரிக்கையை மழுங்கடிக்கலாம் என்று எண்ணுகின்றது. ஆனால் சிறீலங்கா அரசுக்கு ஒன்று கூறிக் கொள்கின்றோம். உங்கள் மிரட்டலால் அழித் தொழிப்பால், அடக்கு முறையால். ஈழக்கோரிக்கையை மழுங்கடிக்கலாம் என்று எண்ணுவீர்களாயின் அதைக் கைவிடுங்கள். அடக்கு முறைக்கு ஆட்பட்டிருக்கும் எந்த இனமும் அடங்கிக் கிடந்ததாகச் சரித்திரம் கிடையாது, உங்களது இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேலும் மேலும் மக்களை விடுதலையின்பால் தீவிரப்படுத்துமே தவிர, அவர்களை அதிலிருந்து ஒதுக்கிவிட உங்களால் முடியாது. மக்கள் சத்தியின் முன் உங்களது துப்பாக்கிகள் தூள்தூளாவது திண்ணம். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக வியட்நாம் மக்களின் வீரம் மிகுந்த போராட்டத்தையும், நிக்கரகுவா மக்கள் சர்வாதிகாரி "சோமேசா"வைத் தூக்கி எறிந்ததையும், இன்று எல்சல்வடோ

(அட்டையின் 3-ம் பக்கம் பார்க்கவும்.

# ஈழப்போராட்டத்தின் திருப்புமுனை சிவகுமார்

1950 ஆகஸ்ட் 23 இல் பிறந்து 1974 ஜூன் 5ம் திகதி வரை 23 ஆண்டு காலமே வாழ்ந்த சிவக்குமாரன், ஈழ விடுதலைப் போராளிகளின் நெஞ்சங்களில் மாத்திரமல்லாமல் ஈழ மக்களின் நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான். இன்று உரும்பராயில் சிலையாக நிற்கும் அவன் கூட சிறீலங்கா அரசிற்கு சிம்ம சொப்பனமாய் இருக்கின்றான். ஆம் இந்த இருபத்தி மூன்று வயதிற்குள் அவன் அப்படி என் தான் சாதித்தான்' அவனை மக்கள் எல்லாரும் போற்றுவதற்கு காரணமென்ன? அவனது சிலையைக்கண்டு ஆயுதப்படையினர் ஏன் நடுங்க வேண்டும்? அதை ஏன் உடைத்து நொருக்க வேண்டும்?

ஆம், அவன் அநீதிகளையும், அடக்கு முறைகளையும் கண்டு சீறினான், சிங்கமெனச் சிலிர்த்தெழுந்தான். சாதாரணமான சிறு சிறு அநீதிகளைக் கண்டே ஆர்ப்பரித்தெழுப அவன் சிறீலங்கா அரசின் அடக்கு முறைகளைக் கண்டிக்கத் தொடங்கினான். சாத்வீகம் அகிம்சை முறையில் நடத்தப்பட்ட போராட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், ஆளும் வர்க்கத்தால் ஆயுதம் கொண்டு நசுக்கப்படுவதைக் கண்டான். ஆயுதத்தை ஆயுதத்தால் தான் முறியடிக்க வேண்டும் என்ற நிலைக்கு வந்தான். 25 வருட காலம் தமிழ்த் தலைவர்கள் அகிம்சை பேசியே அடி உதை வாங்கியதையும் நினைத்துப் பார்த்தான். அகிம்சையினால் அவர்கள் அடைந்ததெல்லாம் "வெறும் பூச்சியந்தான் என்பதையும் உணர்ந்து கொண்டான். எனவே இவ்வடக்கு முறைகளை வெற்றி கொண்டு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற வேண்டுமாயின் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தான். பாராளுமன்ற அரசியல்வாதிகளைப் போல் அவன் மேடையில் நின்று முழங்க விரும்பவில்லை. என்ன காரியமாக இருந்தாலும் அதைசெயல் பூர்வமாகச் செய்யவே விரும்பினான். அப்படிச் செய்தும் வந்தான்.

இங்கு, அவன் எவற்றைச் செய்தான் என்று பட்டியல் போடும் அவசியம் இல்லை. ஆனால் அவன் ஓர் நடைமுறை வாதி என்பதை யாரும் மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் சாதிக் கொடுமை தலைவிரித்தாடிய சமயத்தில், அவன் தனது ஊரிலேயே சமபந்திபோசனம் நடாத்தினான். தலைவர்கள் என்று கருதப்படுவோர்கள், மேடையில் முழங்கிவிட்டு, வீட்டுக்குச் சென்று "ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி" என்று கூறுவதைப் போல், அவன் இருக்க விரும்பவில்லை. அவன் நடத்தும் சமபந்தி போசனத்தின் மூலம் சாதிக் கொடுமையை உடைக்கலாமா இல்லையா என்பதல்ல இங்கு முக்கியம். ஆனால் தனது 16வது வயதில் அவன் இப்படியான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினான் என்பது தான் இங்கு முக்கியம்.

அதே போல்த்தான் அப்பாவி மக்கள் மீது அரசு ஏவிவிடும் வன்முறையை, அவன் வன்முறையாலேயே முறியடிக்க முயற்சிசெய்தான். இதன் பிரதிபலிப்பாகத்தான் சிங்கள உதவி அமைச்சரின் காரும், யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவின் காரும், அவனின் கைக்குண்டுக்கு இலக்கானது இதன் காரணமாக பல மாதங்கள் அவன் சிறீலங்கா சிறைகளில் சித்திரவதை செய்யப் பட்டான். ஆனால் அவனின் மேல் எவ்வித குற்றமும் சுமத்த முடியாத பொலீசார், அவனை விடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைசெய்தனர். இதன் பின்னர் தான், அதாவது 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றதும், அதைத் தொடர்ந்து 9 தமிழர்கள் சிறீலங்கா அரசுப் படையால் படுகொலை செய்யப்பட்டது மாகும். இதனைப் பொறுக்க முடியாத சிவகுமாரன் இதற்கு காரணமாக இருந்த சந்திரசேகரா என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரை அழித்தொழிப்பதற்கு முயற்சித்தான். மூன்று முறை அவன் முயற்சித்தும், மூன்று முறையும் சந்திரசேகரா மயிரிழையில் உயிர் தப்பினான்.

ஆனால் பொலீசார் அவனை வலைவீசித் தேடித்திரிந்தார்கள். இதனால் அவன் இலங்கையைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கு அன்றைய தமிழ்த் தலைவர்கள் உதவி செய்வதாகக் கூறியும் பின்னர் கைவிரித்து விட்டார்கள். இந்நிலையில்த்தான் அவன் பொலீசாரால் கைது செய்யப் பட்டான். அச்சமயம் தமிழ்த் தலைவர்கள் என்று கருதப்படுவோர் அவனுக்கு உதவி செய்திருந்தால் சிலசமயங்களில் தமிழ்ச் சமுதாயத்துக்கு இன்று நல்லதோர் தலைவன் கிடைத்திருக்கலாம். பொலீசாரால் கைது செய்யப்படுமுன்னர் கூட அவன் பொலீசாருடன் சமர் புரிந்தே கைதானான். ஆனால் அவனுக்கு ஏற்கனவே சிறீலங்கா சிறைகளையும், சித்திரவதைகளைப் பற்றியும் அனுபவம் இருந்ததனால் அவன் கைதான உடனேயே தான் தயாராக வைத்திருந்த சயனைட்டை சாப்பிட்டு சில மணி நேரங்களில் உயிர் விட்டான்.

ஆம், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடியே அவன் உயிர் துறந்தான். அன்று மாத்திரம் சிவகுமாரை வழிநடத்த சரியான ஓர் தலைமை கிடைத்திருக்குமேயாயின் சிவகுமாரன் இப்படி தனிநபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டான் என்றே நம்புகின்றோம். மாறாக ஈழ விடுதலைப் போராட்டம் சரியான திசை வழியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும். அவனைக் காப்பாற்ற முடியாத தலைவர்கள் எல்லோரும், அவன் இறந்ததும் அவனை வைத்துப் பிழைக்கத் தொடங்கினார்கள். இன்னும் அவனது பெயரை வைத்தே பிழைக்கின்றார்கள். ஆனால் போராளிகளாகிய எம்மைப் பொறுத்தவரை அவன் எமது வழிகாட்டி, அகிம்சை என்ற காலத்துக்கொவ்வாத சாக்கடைக்குள் எமது தலைவர்கள் அமிழ்ந்திருந்த நேரத்தில் அகிம்சையல்ல ஆயுதத்தால் தான் ஆளும் வர்க்கத்தை உடைக்க முடியும் என்று கூறியவன். அவனது போராட்டம் தனிநபர் போராட்டமாக இருந்திருக்கலாம். ஆனால் எமது மக்களை தலைவர்கள் எல்லாம் முட்டாளாக்கிக் கொண்டிருந்த நேரத்தில் அவனது செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு ஓர் புதிய பாதையையும் புதிய உற்சாகத்தையும் கொடுத்தது.

சிவகுமாரா! நாம் உன்னிடம் இருந்து நிறையவே கற்றுள்ளோம். நீ விட்ட பிழைகளை நாம் விமர்சித்து அதிலிருந்தும் திருந்தியுள்ளோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டக் கால கட்டத்தில் சிறிதளவு காலமே நீ வாழ்ந்திருந்தாலும், உனது பங்களிப்பு மகத்தானது, மறக்க முடியாதது. எமது போராட்டப் பாதையில் நீ ஒரு திருப்புமுனை. அடக்கு முறைக்கும், அநீதிக்கும் எதிராக ,நீ தூக்கிய ஆயுதத்தை நாம் இன்றும் கீழே வைக்கவில்லை. ஏனெனில் அதன் வேலை இன்னும் முடிவடைந்து விடவில்லை. உனது நோக்கமும் எமது நோக்கமுமாகிய சோசலிச ஈழத்தை ஸ்தாபிக்கும் வரை அவ்வாயுதங்கள் எம்முடனேயே இருக்கும்.

-தோழன்



# ஜே. ஆரின் அடக்கு முறையைக் கண்டித்து

# சாஜகான் தீக்குளிப்பு

அண்மைக் காலங்களில் இலங்கையில் தமிழின அடக்குமுறை மிகவும் கொடூரமாக செயற்படுத்தப் படுகின்றது. 'அவசரகாலச் சட்டம், பயங்கர வாதத் தடைசட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க முடியாத சிறீலங்கா அரசு, பயங்கரவாதிகள் என்று கருதப்படுவோரையும், ஆயுதங்களோ, வெடி மருந்துகளோ வைத்திருப்போர் என்று கருதப்படுவோரையும், சுட்டுத் தள்ளும் படி தனது இராணுவத்துக்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் ஈழப் பிரதேசம் சுடுகாடாகும் பயங்கர நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக் கெதிரான இச் சட்டங்களை உடன் நிறுத்துமாறு, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச யூரிகள் சபை, மனித உரிமைகள் இயக்கம் போன்றவை ஜே.ஆர் அரசை வற்புறுத்தி வருகின்றன. சர்வதேசரீதியாக இப்படியான எதிர்ப்புணர்வு ஏற்பட்டிருந்தாலும், ஈழத் தமிழர் எல்லாம் ஆவலுடன் எதிர்பார்க்கும் தமிழகத்திடமிருந்து இச் சட்டங்களுக்கு கெதிரான ஓர் ஆக்கபூர்வ எதிர்ப்பு இன்னும் உருவாகாமை மிகவும் வருத்தத்திற்குரியதே. ஈழத் தமிழர் துன்புறும் போதெல்லாம் அதற்கெதிராக குரல் கொடுக்கும் தமிழக மக்களும், தமிழக அரசியல் கட்சிகளும் கடந்த சில மாதங்களாக மௌனம் சாதிப்பதும், மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடப்பதும் எம்மை மிகவும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. இங்கு நாம் தமிழகத்தையோ, தமிழக அரசியல் கட்சிகளையோ கண்டிக்கவில்லை. ஆனால் நாம் எமது சாகோதரர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதில் ஒரு சிறிய பங்களிப்பாவது ஆக்கபூர்வமாகச் செய்யப்படவில்லையே என்று தான் வருந்துகின்றோம்.

இச் சமயத்தில் தான் தமிழின, மொழி உணர்வு கொண்ட "சாஜகான் என்னும் இளைஞர் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் தன்னைத்தானே தீ மூட்டியதன் மூலம் தமிழகத் தமிழரின் ஒருமித்த கண்டனத்தை சிறீலங்கா அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டக்குழுத் தலைவரான இவர் 22 வயதே நிரம்பிய மதுரையைச் சேர்ந்த இளைஞர் ஆவர். தமிழக அரசியல கட்சிகள் ஈழத தமிழரில் கூடுதலான கவனம் எடுக்காவிடினும், தமிழகத் தமிழர்கள் ஆதரவு எப்பொழுதும் ஈழத் தமிழர்க்குண்டென்பதற்கு சாஜகானின் தன்னலமற்ற எதிர்ப்பும் கண்டனமுமே போதுமான சாட்சியங்களாகும்.

ஈழத்தின் போராட்ட களத்தில் தமது இன்னுயிரை ஈர்த்த போராளிகள் பலர். ஆனால் இவ்வளவு தூரம் தியாக மனப்பான்மையுடன் ஜே. ஆரின் சட்டங்களுக்கெதிராக, ஈழத்தில் யாராவது இதுவரை தமது இன்னுயிரை ஈர்ந்ததாக சரித்திரமல்லை. அப்படி பார்க்கும் பொழுது தோழர் சாஜகானின், துணிவை, நெஞ்சுறுதியை, அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழின் மேல் வைத்துள்ள பற்றை, அவரது இலட்சியத்தை நாம் போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம். சாஜகானின் தன்னலமற்ற தியாக மனப்பான்மை ஈழ விடுதலைப் போராளிகளுக்கு புதிய உற்சாகத்தையும், தெம்பையும் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆனால் ஈழ விடுதலைக்கு எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டி உள்ள இவ்வாரம்ப கட்டத்தில், தம்மைத் தாமே எரித்துக் கொள்வது அவசியம் தானா? ஏனெனில் ஒவ்வொரு போராளியின் மதிப்பும் அளவிடற்கரியது. ஒவ்வொருவரையும் பொறுத்தவரை அவர்களது உயிர் அவர்களுக்கு சாதாரணமானதாய் இருக்கலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரை ஒவ்வொரு போராளியின் உயிரும் இவ்வுலகத்தில் இருக்கும் வேறெதற்கும் ஈடிணையற்றது, ஏனெனில் எமது மக்களுக்காக மாத்திரமல்லாமல், இவ்வுலக மக்களுக்கே அவர்களின் சேவை இன்று அவசியமும் அவசரமுமானதாகும், எனவே வருங்காலத்திலாவது தோழர்கள் இதை உணர்ந்து நடக்க வேண்டும் என்பதே எமது அவா. இச் சமயத்தில் தோழர் மாஓவின் கருத்தொன்றையும் நினைவுறுத்த விரும்புகின்றோம். "தியாகம் என்பது தன்னையே தான் அழித்துக் கொள்வதென்பதாகாது. மாறாக எதிரியை அழித்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதுதான் உண்மையான தியாகம்"

ஆம்! இதில் உள்ள உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். கொடுமை செய்யும் எதிரியை அழிப்பதை விட்டு எம்மை நாமே அழித்துக் கொள்வதில் என்ன இலாபம் உண்டு. மாறாக கொடுமைக்காரர் நிரந்தரமாக அழிக்கப்படுவதற்காவது நாம் நீண்டகாலம் உயிருடன் இருக்க வேண்டிய அவசியமுள்ளது என்பதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

ஈழ மாணவர் பொது மன்றத்தினராகிய நாம் சென்னை ராஜப்பேட்டை மருத்துவமனையில் அவரைப்பார்த்து ஆறுதல் கூறச் சென்றிருந்தோம். கை, கால், உடம்பெல்லாம் எரிந்து புண்ணாகியிருந்தாலும் அவரது உறுதியும், தன்னம்பிக்கையும் புண்ணாகி விடவில்லை. நாம் அவருக்கு ஆறுதல் சொல்லும் நிலை மாறி, அவர் எம்மை உற்சாகப்படுத்தும் நிலையே அங்கிருந்தது. அவர் விரைவில் குணமடைந்து ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான தனது பங்களிப்பை தொடர்ந்து செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம்.

தமிழகத்தில் இப்படி ஆயிரமாயிரம் சாஜகான்கள் உருவாவதை தமிழக அரசோ, இந்திய அரசோ விரும்பாது என்றும் நம்புகின்றோம். ஆகவே தமிழ் மக்களின் உணர்வுகளை சிறீலங்கா அரசுக்கு இவர்கள் நிச்சயம் தெரிவிப்பார்கள் என்று உறுதியுடன் நம்புகின்றோம். ❖



# யாழ் உள்ளூராட்சித் தேர்தல் ஓர் கண்ணோட்டம்

இலங்கையில் கடந்த மே மாதம் 18ம் திகதி நடந்த மாநகர, நகர சபைத் தேர்தல்களில், தமிழ் பேசும் பகுதிகளான வடக்கு கிழக்கு மகாணங்களில் அனைத்து இடங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்; ஏனைய சிங்களப் பிரதேசங்களில் ஐக்கியதேசியக் கட்சி, 32 நகர சபைகளில் 25ஐயும் 12 மாநகரசபைகளில் 9ஐயும் கைப்பற்றி உள்ளது.

இதில் வட மாகாணத்தில் நடந்த தேர்தலைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும். ஏனெனில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய தளங்களில் ஒன்றாகவும், வன்முறைச் சம்பவங்களும், அரச பயங்கரவாதங்கள் அடிக்கடி கட்டவிழ்த்து விடப்படும் பிரதேசமாகவும் இருப்பதுடன் நடந்து முடிந்த தேர்தலில் அரசியல் கட்சிகளும் விடுதலைக் குழுக்களும் நேருக்கு நேராக மோதிக்கொண்ட பிரதேசமாகவும் இது இருப்பதால் இதைப்பற்றி ஆழமாக ஆராய வேண்டியது எமது கடமையாகின்றது.

தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர், தீவிரவாதிகள் குழுவைச் சார்ந்த இளைஞர்கள் சிலர் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் இருவரையும் (தமிழர்) ஐ.தே.க யாழ் மாவட்ட அமைப்பாளரின் மெய்ப்பாதுகாவலரையும் சுட்டுக் கொன்றுள்ளார்கள். அத்துடன் மட்டக்களப்பு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களான இராசதுரை, தேவநாயகம் போன்றோருக்கு கொலை மிரட்டல் கடிதங்களையும் அனுப்பி உள்ளனர். இவை நடைபெற்று ஒரு சில நாட்களில் சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பேசிய கூட்டம் குழப்பப்பட்டதுடன், அவரது மோட்டார் வண்டியும் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு நொருக்கப்பட்டது. அத்துடன் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கி தேர்தலை பகிஸ்கரிக்கும் படியும் இவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தனர். இவர்களது துப்பாக்கிச் சூட்டுக்கு அஞ்சிய ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் பலர் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கினர். இதைத் தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரசும் வடக்கு கிழக்கில் இருந்து முற்றாக வாபஸ் வாங்கியது. ஆனால் அமிர்தலிங்கம் தேர்தலை விட்டு ஒதுங்குவதில்லை என்று தீர்மானமாக அறிவித்தார். அது மாத்திரமல்லாமல், தனது கட்சி அங்கத்தவர்கள் வாபஸ் பெற முயற்சித்த போதும் அவர்களை தடுத்து நிறுத்தி தேர்தலை எதிர்நோக்கும்படி வேண்டினார். அத்துடன் வன்முறை மூலம் பகிஸ்கரிப்பை செயற்படுத்த எண்ணிய தீவிரவாதிகளையும் அவர் மிகவும் காட்டமாகக் கண்டித்தார். தீவிரவாதிகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற தமிழீழ விடுதலை அணியும் ஆதரவளிப்பதாய் குற்றம் சாட்டினார். ஆனால் தீவிரவாதிகள் அமிர்தலிங்கத்தின் மிதவாதப் பேச்சுக்களை ஏற்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு தான் நாம் தீவிரவாதிகளின் செயற்பாட்டை கூர்மையாக அவதானிக்க வேண்டியவர்களாய் உள்ளோம். தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் நின்றது சரியா, பிழையா, அல்லது அவர்கள் தேர்தலில் நிற்க வேண்டியதன் காரணமென்ன? இவற்றையும் நாம் இங்கு ஆராய வேண்டியவர்களாய் உள்ளோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை எடுத்துக் கொள்வோமாயின், முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்காக பாராளுமன்றமே கதி என்றிருக்கும் ஓர் அரசியல் கட்சியே தவிர விடுதலை இயக்கமல்ல, அவர்கள் விடுதலைக் கூட்டணி என்று பெயர் வைத்ததும் விடுதலையை ஒழிப்பதற்கே அல்லாமல் விடுதலையை வென்றெடுக்கவல்ல, இது யதார்த்தமான உண்மை. அதாவது மாக்சிசத்தை அழித்தொழிப்பதற்கு இன்று மாக்சிசம் என்ற வார்த்தையை பல முதலாளித்துவ பிற்போக்கு சக்திகள் பாவித்து வருவதை இன்று நாம் நடை முறையில் காணலாம். தரகு முதலாளித்துவத்துக்கும், அழுகி நாற்றமெடுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் முட்டுக் கொடுக்கும் ஜே.ஆர். ஜயவர்த்தனா, சோசலிசத்தை ஒழிபபதற்காகவே இன்று அடிக்கடி சோசலிசத்தைப் பற்றி பேசுகின்றார்.

அதைப்போலவே தமிழர்விடுதலைக் கூட்டணியும்விடுதலையை அழித்தொழிப்பதற்கே விடுதலையைப்பற்றி பேசி வருகின்றார்கள். இதற்காகவே தமது கட்சிக்கும் விடுதலைக்கூட்டணி என்ற பெயரைச் சூட்டியுள்ளார். இது மாத்திரமல்ல சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான அடக்கு முறைகளால், விடுதலை ஒன்றே எமது பிரச்சனைகளுக்குத் தீர்ப்பைத் தரும் என்று தமிழ் பேசும் மக்கள் நம்பினார்கள். 1971ஆம் ஆண்டுக்குப் பின்னால் இது தீவிரமடைந்து மக்கள் எல்லாரும் விடுதலை என்றே கோசித்துவருகிறார்கள். எனவே மக்கள் மத்தியில் பிரபலமான இக்கோசத்தை பாராளுமன்ற கதிரைகளை கைப்பற்றும் பொருட்டு இவர்களும் விடுதலை என்று கூக்கிரலிடத் தொடங்கினார்கள். அத்துடன் 77ம் ஆண்டுத் தேர்தலானது தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கான சர்வஜன வாக்கெடுப்பு என்றும் கூவினார்கள். எனவே மக்கள் இவர்களை நம்பி பாராளுமன்றம் அனுப்பி வைத்தார்கள். ஆனால் இவர்கள் தமது வர்க்க நிலையில் இருந்து விடுபட முடியாமல் சிறிலங்கா அரசுடன் தொடர்ச்சியாக சமரசப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்கள். இவர்களுக்கு விடுதலை என்பது முக்கியமல்ல. இவர்களது நோக்கமெல்லாம் பாராளுமன்றத்தில் கதிரையை பிடிப்பதுதான். தேர்தலில் நின்று ஜெயிப்பதற்கு இவர்கள் என்னவும் செய்வார்கள். தற்போது ஈழக் கோரிக்கையை கைவிட்டு மாநில சுயாட்சி கோருவதிலிருந்து ஈழ விடுதலையின் மீது அவர்கள் எவ்வளவு தூரம் உள்ளார்ந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதை நாம் அறியலாம். எனவே இவர்கள் மாநகர சபைத் தேர்தலிலும் போட்டியிட்டதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது.

ஆனால் இவர்கள், பிற்போக்கு வாதிகள், முதலாளித்துவ வாதிகள், காட்டிக் கொடுப்பவர்கள், வர்க்க சமரசம் பேசுகின்றவர்கள் என்பதற்காக இவர்களை மிரட்டுவதோ, அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தோரை சுட்டுக் கொலை செய்வதுதானா விடுதலைக்கான வழி? இப்படியான வன்செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தமிழீழ



விடுதலைத் தீவிரவாதிகள் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு மறைமுக உதவி செய்தவராகின்றார்கள். அதாவது ஆளும் கட்சிவேட்பாளர்களை சுட்டுக் கொலை செய்ததன் மூலம் அவர்களை தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கவைத்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியை வெறும் மிரட்டலுடன் விட்டுள்ளார்கள் இதன் மூலம் 1 வீதம் வாக்குகள் வாங்கினாலும் அவர்களே தேர்தலில் மீண்டும் வெற்றி அடையும் வாய்ப்பை தோற்றுவித்துள்ளார்கள். ஏனெனில் போட்டிக்கு யாருமில்லாத போது இவர்கள் தாமாகவே வெற்றி வாய்ப்பை தழுவிக் கொள்வார்கள். இதன் கருத்து தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தோரையும் சுட்டுக் கொலை செய்ய வேண்டுமென்பதாகாது. தீவிரவாதிகளால் அப்படிச் செய்யவும் முடியாது. த. வி. கூட்டணி அங்கத்தினர்களை கொலை செய்வதன் மூலம் தாங்கள் மக்களிடம் இருந்து தூக்கியெறிப்படுவார்கள் என்பதை இவர்கள் நன்கு உணர்வார்கள். ஐ.தே.கட்சியானது தமிழ் பேசும் மக்கள் மீது தொடர்ச்சியான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விடும் ஓர் இனவாத அரசு. எனவே அக்கட்சியில் யாரை சுட்டுக் கொன்றாலும் சாதாரண தமிழ் மக்கள் அதைப்பற்றி கவலைப்படப் போவது கிடையாது. ஆனால் த.வி. கூட்டணி எப்படித் தான் பிற்போக்குவாதக் கும்பலாய் இருந்தாலும், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி. அதுமாத்திரமல்லாமல் 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஒரு அரசியல் கட்சி. அவர்கள் எல்லோரும் பிற்போக்கு வாதிகள், அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறியப்பட வேண்டியவர்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்களை தூக்கி எறிந்தால் மக்களுக்கு தலைமை தாங்க இப்பொழுது எந்த முற்போக்கு கட்சிகள் அல்லது அமைப்புகள் தயாராய் உள்ளது. வன்முறை மூலம் இவர்களை தூக்கி எறிய முயலும் தீவிர வாதிகள் மக்களுக்கு தலைமை கொடுக்க தயாராய் உள்ளனரா? இல்லையேல் ஏனைய புரட்சிகர அமைப்புகள் தான் தயாராய் உள்ளனவா? இல்லை எனும் போது மக்களுக்கு மாற்று வழி என்ன மக்களுக்குமாற்று வழியைக்காட்டாமல் கூட்டணி உறுப்பினர்களை கொலை செய்வதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது தீவிர வாதிகளுக்கு நன்குதெரியும். எனவே தான் சொல்கின்றோம், இவர்களால் கூட்டணி உறுப்பினர்களை கொலை செய்ய முடியாது. வெறுமனே மிரட்டத்தான் முடியும். இதனைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் நன்குணர்வார். எனவே தான் அவரும் வன்முறையாளருக்குப் பணியாமல் தேர்தலைச் சந்திப்பதில் தீவிரமாக இருந்தார். ஆகவேதான் கூறுகின்றோம், தமது வன்முறை மூலம் இவர்கள் மறைமுகமாக கூட்டணிக்கு உதவி செய்கின்றார்களென்று. அதாவது இவர்கள் அறிந்தோ அறியாமலோ ஓர் பிற்போக்கு வாதக் கட்சியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாய் இருக்கின்றார்கள்.

இவற்றுக்கு மேலாக இவர்கள் மக்களுக்கும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். அதாவது யாரும் தேர்தலில் நிற்கக் கூடாதென்றும், வாக்கு அளிக்கச் செல்லக் கூடாதென்றும் எச்சரித்துள்ளார்கள். ஓர் விடுதலை இயக்கமானது தமது கொள்கை விளக்கங்கள், சித்தாந்தங்களின் மூலம் மக்களை தமது பக்கம் வென்றெடுக்க வேண்டுமேயொழிய மிரட்டலின் மூலமோ, அச்சுறுத்தலின் மூலமோ வென்றெடுக்க முடியாது என்பதை நன்குணரவேண்டும். திடமான கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையும் சித்தாந்தமும் மக்களைப் பற்றிக் கொண்டால் அதை எந்த ஒரு சக்தியாலும் உடைத்தெறிய முடியாது.

இங்கே இன்னுமொன்றை நாம் அவதானிக்க வேண்டும். தீவிரவாதிகளின் செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்டத்தை மையமாகக் கொண்டதாகவே உள்ளது. ஆனால் ஈழப் பிரதேசமென்பது மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, பொத்துவில், மலையக மக்களையும் உள்ளடக்கிய தென்பதை இவர்கள் மறந்து விட்டார்கள் போல் உள்ளது. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தல்களை பகீஸ்கரிக்கு மாறு கோரிய இத் தீவிரவாதிகள் தமது பிரச்சாரத்தை யாழ்குடா நாட்டில் தான் மேற்கொண்டார்களே ஒழிய அதற்கு அப்பால் அவர்களின் செய்ற்பாடுகள் ஏதும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இதனுல் பகீஸ்கரிப்பும் வெற்றியடையவில்லை. இதனை வைத்துப் பார்க்கும் பொழுது இவர்கள் யாழ்குடாநாட்டிற்கான விடுதலைக்காக மாத்திரமே போராடுகின்றார்களா என்ற ஐயப்பாடும் தோன்றுகின்றது. அப்படியாயின் ஈழப்பிரதேசத்தின் ஏனைய மக்களைப்பற்றி இவர்களின் நிலைப்பாடென்ன? இவற்றையெல்லாம் இங்கு நாம் ஆராய்வதற்கும் காரணங்கள் உண்டு. ஏனெனில் தீவிரவாதிகளின் கடந்த கால நடவடிக்கைகளையும், தற்போதைய அவர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும் பொழுது இவர்களது செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்டத்துக்குள்ளேயே நடைமுறைப் படுத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

யாழ் மாவட்டத்து மக்கள் ஈழத்தின் ஏனைய மக்களை விட கல்வி அறிவில் உயர்ந்தவர்கள் அத்துடன் ஓரளவுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியும் அடைந்தவர்கள். ஆனால் ஏனைய மக்கள் இருவகையிலுமே பின் நிற்பவர்கள். எனவே ஈழ விடுதலையை நோக்கமாகக் கொண்ட விடுதலை இயக்கங்கள் முதலில் சகல தரப்பு மக்களையும் அரசியல் விழிப்புணர்ச்சி அடையச் செய்வது முக்கியம். இதை விடுத்து ஒரே இடத்தில் இருந்து சில வன்முறைகளில் ஈடுபடுவது எந்த ஒரு முடிவையும் ஏற்படுத்தாது. மாறாக ஒரு சில வன்முறைச் சம்பத்தினுல் மக்கள் தான் ஆயுதப் படையினரால் அழிக்கப் படுவார்கள் அதாவது அரச வன்முறைகளை எதிர்த்து மக்கள் போராட ஆயத்தமாகாதவரை தீவிரவாதிகளின் வன்முறைகள் அழிவையே ஏற்படுத்தும்.

1981ம் ஆண்டு தீவிரவாதிகள் மூன்று பொலீசாரை சுட்டார்கள் என்ற பெயரில் முழு இலங்கையிலுமே தமிழர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அதே போல் நடந்து முடிந்த தேர்தலில் ஓர் இராணுவக் கோப்ரல் சுட்டுக் கொல்லப்பட்டான் என்பதற்காகவும் இரண்டு விமானப்படையினர் சுடப்பட்டனர் என்பதற்காகவும், யாழ், வன்னி, திருமலை என்ற பேதமின்றி சகல தமிழ்ப்பகுதிகளும் ஆயுதப் படையினுல் எரியூட்டப்படுகின்றன. இவ்வளவு நடந்தும் கூட மக்கள் இவற்றுக் கெதிராக கிளர்ந்தெழுந்தார்களா? என்றுல், இல்லை என்பதே உண்மையாகும். அதாவது மக்கள் போராட்டத்திற்கு முற்று முழுதாய் தயாராய் இல்லாத போது தீவிர வாதிகள் எனப்படும் சிலர் செய்யும் வன்முறை நடவடிககைகள் அவர்களது மக்களின் அழிவுக்கே வழி வகுக்கும். இது நேரடியாகவே இன்று நாம் அனுபவிக்கும் நிதர்சனமான உண்மையாகும். எனவேதான் கூறுகின்றோம். மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு அடக்கு முறைகளுக் கெதிராக கிளர்ந்தெழச் செய்ய வேண்டும் இதன் மூலம் தான் அடக்குமுறை அரசை நாம் வெற்றி கொள்ள முடியும். இதனை விட்டு கண் மூடித்தனமான ரீதியில் இவர்கள் செயற்படுவார்களாயின் அப்பாவி மக்களைத்தான் இவர்கள் பலிக்கடாவாக்குவார்கள். அண்மைய சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும் விடுதலைப் போராட்டத்தில் இவையெல்லாம் சர்வசாதாரணம் என்று இவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது விடுதலைப் போராட்டத்தில் பலர் தமது இன்னுயிர்களை அர்ப்பணிக்க வேண்டியதும், ஆளும் வர்க்கத்தின் காட்டுமிராண்டிச் செயலும் தவிர்க்க முடியாததே ஆனால் இயன்றவரை மனித உயிர்களின் சேதத்தைக் குறைப்பதே உண்மையான ஓர் விடுதலை இயக்கத்தின் கடமையாகும். மக்களை அணிதிரட்டாமலும், ஓர் திட்டவட்டமான போராட்ட அணுகுமுறை இல்லாமலும், செயற்படுத்தப்படும் வன்முறையானது நிட்சயமாக விடுதலையைப்பெற்றுத்தராது. மாறாக மக்கள் விடுதலை இயக்கங்களை வெறுத்தொதுக்கவே இது வழி சமைக்கும். பிற்போக்கு கும்பல்களை அடையாளம் கண்டு அம்பலப் படுத்துவதன் மூலமும், மக்கள் மத்தியில் சரியான ரீதியில் அரசியல்பிரச்சாரத்தை மேற்கொள்வதன் மூலமுமே மக்களை அணி திரட்ட முடியும். மக்களை அணிதிரட்டாமல் மக்களில் இருந்து அந்நியப்பட்டு, தனித்து நின்று விடுதலைக்கு போராடுவதானது முழு முட்டாள் தனமானது மாத்திரமல்லாமல் தம்மைத் தாமே அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதுமாகும். தேர்தல் காலத்திலும் அதன்பின்னர் நடந்த சம்பவங்களும் எமக்கு இதைத்தான் போதிக்கின்றன.



இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுவதால் நாம் ஆயுதப்புரட்சிக்கு எதிரானவரென்றாகிவிடாது. தோழர் லெனின் கூறியவாறு பயங்கரவாதம் என்பது போராட்டத்தின் ஓர் அம்சமே. ஆனல் வெறும் பயங்கரவாதமே போராட்டமாகி விடாது. அத்துடன் செஞ்சீனச் சிற்பி தோழர் மா—ஓ கூறுகின்றார், அரசியல் தான் துப்பாக்கியை வழிநடத்த வேண்டுமே தவிர, துப்பாக்கி அரசியலை வழி நடத்தக் கூடாது. வழி நடத்தவும் முடியாது. இதுவேதான் எமது கொள்கையும்.

உலக வரலாறுகளைத் தான் நாம் உதறித் தள்ளினாலும், உள்ளூர் அநுபவங்களாவது எமக்கு பாடமாக அமையவேண்டும். இல்லையேல் உலக வரலாற்றிலேயே மிகவும் கசப்பான வரலாற்றைப் படைத்தவர்களாவோம்.

---

## விடுதலை முன்னணியினர் தொடர்ந்து சிறையில

மட்டக் களப்பில் கைது செய்யப்பட்ட ஈழமக்கள் விடுதலை முன்னணியைச் சார்ந்த இளைஞர்கள் பேராசிரியர் ஆகியோர் கடந்த 81ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இரகசியப் பொலீசார் தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபடுவதாகக் கூறியதால் அவர்கள் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வந்த செய்தியும் எமது கருத்தும்

மாநில சுயாட்சி கிடைக்குமாயின் ஈழக் கோரிக்கையை கைவிடவும் நாம் தயாராய் உள்ளோம். [த.வி.கூ செயலாளர் நாயகம் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்]

ஈழக்கோரிக்கையை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டால் அல்லவா இவர்கள் ஈழக் கோரிக்கையை கைவிட வேண்டும். ஈழக் கோரிக்கை என்பது மக்கள் கோசமே அன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோசமன்று. பாராளுமன்றக் கதிரைகளைத் தாவிப் பிடிப்பதற்காகத்தான் இவர்கள் ஈழம் என்று கூச்சலிட்டார்கள் என்பதை நாம் அறிவோம். மக்களும் அறிவார்கள். 1977ம் ஆண்டிலிருந்து இன்று வரை ஈழ விடுதலைக்காக சிறு சப்பாணிப்போராட்டங்களையே நடத்தி வந்த இவர்கள் தாங்கள் ஈழக் கோரிக் கையை கைவிட்டதாக கூறுவது நகைப்புக்குரியது. மக்கள் இவ்வேடதாரிகளை இனங்கண்டு விட்டார்கள். இவர்கள் மக்களால் தூக்கிஎறியப் படும் காலம் தூரத்தில் இல்லை.

அவசர காலச் சட்டத்தின் கீழ் சிறீலங்கா இராணுவத்திற்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் விரிவாக்கப்பட்டுள்ளது. இவற்றின் கீழ் ஐயத்துக்கிடமான எந்த ஒரு நபரையும் சுடுவதற்கு அரச படைகளுக்கு அதிகாரம் உண்டு. அதே போல் வீதிகளில் கிடக்கும் சடலங்களை விசாரணையின்றி அடக்கம் செய்ய பொலிசுக்கு பூரண அதிகாரம் உண்டு.

இதன் மூலம் ஈழத்தமிழ் பேசும் இனத்தை, பிரத்தியேகமாக அப்பாவி மக்களைச் சுட்டுத் தள்ளுவதற்கும் இவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. சுதேசம் என்ற பெயரில் இவர்களின் காட்டு மிராண்டிச் செயல்களை அதிகரித்தே செல்லும் இதன் மூலம் முதலாளித்துவ ஜனநாயகத்தில் மிச்ச சொச்சமாக இருக்கக் கூடிய பாதுகாப்பே அற்றுப் போகின்றது. ஆளும் கட்சியினுல் அரசைக் கொண்டு நடத்த முடியவில்லை என்பதாலேயே இராணுவத்திற்கு கூடுதலான அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. ஒரு பக்கத்தில் கனன்று எரிந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழரின் தேசிய இனப்பிரச்சனை, மற்றைய பக்கத்தில் வளர்ந்துக் கொண்டு வரும் வேலையில்லாத் திண்டாட்டம், இன்னொரு பக்கத்தில் வீழ்ச்சியுற்றுவரும் முதலாளித்துவ பொருளாதாரம். இவற்றுக்கெதிராக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை அடித்து நொருக்க இராணுவத்திற்கு கூடுதலான அதிகாரம். இது அமெரிக்க ஏகாபத்தியத்தில். தொங்கிக் கொண்டிருக்கும் சிறீலங்கா முதலாளித்துவத்தின் அந்திம காலத்தையே காட்டுகின்றது.

———



## செய்திகள்

•• சிறீலங்கா பெரதேனியப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள், சிங்கள இனவாத மாணவர்களால் தாக்கப்பட்டார்கள். இதன் காரணமாக அங்கு கல்வி பயிலும் 1500க்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்தை காலி செய்துவிட்டு தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். பெரதேனியப் பல்கலைக் கழகத்தை தனிச் சிங்களப் பல்கலைக் கழகமாக்குவதன் நோக்கமாகவே இத் தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப் பட்டதாம். பல்கலைக் கழகத்துக்கு திரும்பக் கூடாதென்று தொடர்ந்து தமிழ் மாணவர்களுக்கு மிரட்டல் கடிதங்கள் வருகின்றன.

கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மருத்துவ வளாக தமிழ்மாணவர்கள், சிங்கள மாணவர்களால் தாக்கப்பட்டனர். இதனுல் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். மே 18 நடந்த இச்சம்பவத்தில் கொழும்பு மருத்துவக்கல்லூரியைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள், அங்கிருந்த தமிழ் மாணவர்களின் அறைகளில் சென்று கொள்ளை அடித்தும், மாணவர்களைத் தாக்கியும் விரட்டியுள்ளார் இதனுல் பல ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமதி தமது உடமைகளை இம் மாணவர்கள் இழந்துள்ளார்கள். தற்பொழுது நிலமை ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளதாக அறியப் படுகின்றது.

•• யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் எந்த ஒரு சமுதாயப் பிரச்சனையிலும் முன் நிற்பவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. இம்முறையும் அரச பயங்கரவாதப் படைகளால் எரிக்கப்பட்ட கந்தர்மடம் கிராமத்தை இவர்கள் சிரமதான பணியின் மூலம் செப்பனிட்டு கொடுத்ததுடன், பல ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் திரட்டி அம் மக்களின் நல்வாழ்விற்காக உழைத்து வருகின்றார்கள்.

•• மூதூர் கிளிவெட்டியைச்சேர்ந்த கதிர்காமதம்பிநவரட்ணராசா என்பவர் யாழ் இராணுவ முகாமில் மே10ம் திகதி சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டார். இவர் மிகவும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதால் இவரது உடலினுள் உள்ளும் புறமும் 50க்கு மேற்பட்ட காயங்கள் இருந்ததாக பிரேத பரிசோதனை செய்த டாக்டர் கூறியுள்ளார். மூதூர் மக்களின் கண்ணீர்க் கடலில் மத்தியில் இவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

•• மே 18ம் திகதி கடலில்குளித்து விட்டு வந்தகாரைநகரைச்சேர்ந்த சிறீஸ்காந்தராசா (25) இராணுவத்தால் சுடப்பட்டு மரணமானுர். இவரது மரணம் கொலையெனத் தீர்ப்பளித்த யாழ் நீதிவான் இதைப்பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

•• வல்வெட்டித் துறையைச் சார்ந்த 30வயதான சபாரத்தினம் பழனிவேல் இராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப் பட்டபின் அவர்மீது இராணுவ ட்ரக்கை ஏற்றி இவரது உடலை சின்னுபின்னமாக்கி இரசித்தனராம் இது மே30ம் திகதி வல்வெட்டித் துறையில் நடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலை, இலக்கியம்

கலை, இலக்கியம் என்பது வாழ்க்கையில் தோன்றுகின்றன. சமுதாய வாழ்நிலையால் தோன்றுகின்ற, எண்ணங்களது பிரதிபலிப்பாகும். இது கலாச்சாரத்தின் ஒரு வெளிப்பாடகவும் அமைகிறது.

கலை, இலக்கியம் உண்மை வாழ்க்கையை பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். சரியானதிசை வழியைச் சுட்டிக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

கலை, இலக்கியமானது பிற்போக்குச் சமுதாய அமைப்புகள் நிலவும் நாட்டில், புதிய சமுதாயப் பிரசவத்திற்கான மருத்துவச்சி போலவும், பிற்போக்கு சமுதாய அமைப்பிற்கு சவக்குழி தோண்டுவதாகவும் இருக்க வேண்டும்.

பெரும்பாலான மக்கள் பிற்போக்கான கருத்துக்கள் மற்றும் மூட நம்பிக்கைகள் மீது அதிக ஆர்வமாக உள்ளனர் என்பதற்காக அவற்றுக்கு துதிபாடுவதாக உண்மையான கலை, இலக்கியம் இருக்க முடியாது. வரலாறு கலை இலக்கியத்திடம் மகத்தான பணியை எதிர்நோக்கி நிற்கிறது. வரலாறு அழைக்கிறது, கலை, இலக்கியத்தை புதிய சமுதாயத்தின் பிரசவத்திற்கு களம் அமைக்குமாறு. இந்த அறை கூவலை ஏற்றுக்கொள்ளாது பிற்போக்குதலைவர்களுக்கு துணைபோகும் கலை, இலக்கியமும், கலைஞர்களும் வரலாற்று அரங்கில் வைக்கற்றபேர்வழிகளே.

கலை, இலக்கியத்தில் நடுநிலை என்று கூறுவது சுத்த அபத்தமானது. எதிலும் நடுநிலை என்பது உள்ளார்ந்த அர்த்தத்தில் ஒரு இக்கச் சார்பானதுதான். சமுதாய எதார்த்தத்தை யாராலும் புறக்கணிக்க முடியாது. சமுதாயமானது வர்க்கங்களாக, இரு வேறு நலன்களைக் கொண்ட சமுதாய சக்திகளாக பிரிந்து நிற்கிறது. உற்பத்தி சாதனங்களது உடமையாளர்வர்க்கம் ஒரு புறமும், உழைப்பை விற்று ஜீவனம் நடத்தும் உழைக்கும் மக்கள் மறுபுறமும், ஆகமுதலாளி, தொழிலாளி என்ற இணக்கம் காண முடியாத வர்க்கங்களாக பிரிந்து நிற்கின்றனர். இதில் நடுநிலை என்று பேசுவது சுரண்டலுக்குதுணைபோவதும் முதலாளித்துவத்தின் குறுகியவட்டத்திற்குள் சென்றடைவதையுமே குறிக்கும்.

முதலாளித்துவ வர்க்கம் பிற்போக்கான ஒரு வர்கமாகும். தனது நலனுக்கு அப்பால் முற்போக்கு எண்ண வீச்சுகள் செல்வதற்கு என்றுமே இவ்வர்க்கம் இடமளியாது. ஆபாச இலக்கியங்கள், பெண்களை கேவலமாக்கி துகிலுரியும் மட்டரகமான திரைப்படங்கள், திரையுலக நாயகிகளது படுக்கையறை ரகசியங்களைவெளியிடும் மஞ்சள் பத்திரிகைகள், பெண்களை புகழ்ந்து அவர்களை தெய்வ நிலைக்கு உயர்த்தி அவர்களை அடிமையாக்கும் அலங்காரக் கவிதைகள், இவைதான் முதலாளித்துவம் மூண்டியத்துக் கொண்டு போற்றிப் பாதுகாக்கும் இணையற்ற இலக்கியப் பொக்கிஷங்கள். இவற்ருல் போர்க்குணமிக்க மக்களது எழுச்சிகளை திசை திருப்ப முதலாளித்துவ வர்க்கம் முழுமையான முயற்சிசெய்து வருகிறது. இவர்களுக்காக பணியாற்றும் எழுத்தாளர்கள் (இவர்களை கலைஞர்என கூறுவது சுத்த அபத்தம்) பணத்திற்காக தங்களது



கதைகளில், கவிதைகளில், முதலாளியின் விருப்பத்தின் பேரில் (தமதுவிருப்பத்தில் அல்ல தங்களது கதைகளில் பலதடவை கதாநாயகியின் மார்புச் சேலையை நழுவ விட வேண்டிய நிலைக்கு உள்ளாகிருர்கள். பாவம் இவர்கள் தங்கள் சகோதரிகளையும் மறந்து விட்டார்கள் பணத்திற்காக. இதோடு நிறுத்திக் கொண்டார்களா என்ருல் அதுவுமில்லை, புரட்சியையும், மாக்சிச, லெனினியத்தையும் களங்கப் படுத்த புரட்சிவாதிகள் என்று கூறி புரட்சி இலக்கியம் வடிக்கும் இவர்களது புரட்டல்கள் வேறு.

ஆக மனிதனது பூரணத்துவ வளர்ச்சியை, மனிதனது நன்மைக்காய், உலகை மாற்றும் பணிக்கு சேவை செய்கின்ற கலை, இலக்கியமே முற்போக்கு இலக்கியம் என வழங்கப்படுகிறது. இப்படியான கலை, இலக்கியங்களை எப்படியாக அடையாளம் காண முடியுமென்ருல், நாம் முதலில் முற்போக்கு என்ருல் என்ன என்று சற்று ஆராய வேண்டும். இதை தீர்மானிப்பது எத்தகைய சமூகக் கண்ணேட்டத்தை அது கொண்டுள்ளது என்பதைப் பொறுத்து உள்ளது, ஏற்னெவே இருந்தவற்றைஅப்படியே திரும்ப கொண்டு வருவதற்கு மாருக புதிய வகை முன்னேற்றத்தை கொண்டுவரத் தக்க சமூகத்தின் சார்பாகவே அதாவது ஒரு வர்க்க நிலைப் பாட்டிலேயே முற்போக்குக் கருத்துகள் எழ முடியும்.

இன்றைய சமுதாயத்தில் முற்போக்குக் கருத்துகளைக் கொண்டதும், மனிதவிரோத சமுதாயத்தை தூக்கி வீசி, மனிதனது பூரணத்துவத்துக்கான பயணத்திலும், எந்த வர்க்கம் தலைமை வகிக்கிறதோ அவ்வர்க்க நிலைப்பாட்டில் தான் முற்போக்கு கருத்துக்கள் எழ முடியும். அதுமட்டுமன்றி ஒரு கோட்பாட்டினடிப் படையில் மனிதனை முதன்மைபடுத்தி, உலகை மனிதனுக்காக மாற்றவழி கூறுகின்ற, உலக வரலாற்று நிகழ்ச்சிகளைவிஞ்ஞான பூர்வ நோக்கோடு அணுகும், ஒரு உயர்ந்த கோட்பாட்டு அடிப்படையில் மட்டுமே, முற்போக்கு இலக்கியம் மலர முடியும் கலையின் படைப் பாற்றல் தன்மை இம்முற்போக்குக் கருத்துக்களைபிரதிபலிப்பதை பொறுத்தே அடையாளம் காண முடியும்.

இன்றைய சமுதாயத்தில் ஒரேயொரு முற்போக்குவர்க்கமும், உலகை மனித வாழ்வின் நலத்துக்கு மறு நிர்மாணம்செய்யும் திறமையும, சக்தியும் உள்ள தலைமைச் சக்திபாட்டாளி வர்க்கமாகும்.

விஞ்ஞானபூர்வமான, உலகைப் பற்றியும தெளிவான, உயரிய, கோட்பாடு, மாக்சிச, லெனினியம் ஆகும். எனவே இன்று முற்போக்கு இலக்கியமானது பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டையும், மாக்சிச லெனினிச கோட்பாடு அடிப்படையிலான, இயக்கவியல் முறையிலான, உள்ளடக்கத்தையும் கொண்டே விளங்க முடியும்,

கலை, இலக்கியவாதிகள், நாம் சமுதாயதுக்கு அப்பால், வேறு உலகில் இருப்பதாக கற்பனை செய்வது முட்டாள்தனமானது. இன்று!முட்டாள்களின்'சொர்க்கத்தில் முடமாகி விட்டவர்கள், கலை-இலக்கிய வாதிகள் என தம்மை விளம்பரப்படுத்தும் சில வெற்றுவேட்டுகள், 'கலை' கலைக்காகவே, என்ற வழக்கொழிந்து போன வேக்காட்டுக் கருத்துக்களை தெரிவிக்கிருர்கள். கலை, இலக்கியம் என்பது சமுதாயத்துக்கு புறம்பானதாக, சமுதாய கொடுமைகளைக் கண்டு வேறுபக்கம் திருமுகம் திருப்பும் சந்நியாசி கோலத்தில் இருக்க முடியாது. இந்த வேக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டு கலை, இலக்கியவாதிகள், படைப்பாற்றலில் சுதந்திரம் வேண்டும் என்றும், கம்யூனிச சமுதாயத்தில் இது கிடையாது என்றும், தங்கள் திறனற்ற கூடாரங்களில் நின்று தினமும் கூச்சலிடுகிறார்கள்'. தெவிட்டிப்போன "கதாநாயகிகளுக்கும், மேல்மட்ட பத்தாயிரத்துக்கும்" (லெனின்) சேவை புரியும், பணப்பையை நம்பி எழுதும் இவர்கள், சமுதாயத்தில் சமத்துவமற்ற அசமத்துவ நிலை நிலவும் போது, சுதந்திரம் பற்றி கனவு காணும் இவர்கள் கலை'இலக்கியத்தைகறைபடுத்தும் கேவலமான மனிதர்கள்.

வர்க்கங்களது உறவுமுறைகள், முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் முதலாளி, தொழிலாளி வர்க்கங்களது, இணக்கம் காண முடியாத சமரசமற்ற போராட்டம், இவற்றை உணரும் கலைஞர்கள் படைத்தளிக்கும் கலை—இலக்கியம் வர்க்க சார்பற்றும், கட்சி சார்பற்றும் இருக்க முடியாது.

கலை- இலக்கியத்தில் கட்சிச் சார்பு என்பது ஒரு முற்போக்கு கலைஞன், வர்க்க நலனுக்காக, அதன் உயரிய நோக்கங்களுக்காக, தனது கலைச்சாதனங்களைப் பயன்படுத்தி நடத்துகின்ற உணர்வு பூர்வமான போராட்டமாகவே இருக்கும். மக்களின் நலனுக்கு விரோதமாகச் செயல்படும், பிற்போக்குகட்சிக்குசேவைபுரியும் நிலை, சுதந்திரமாக எப்படி இருக்க முடியும்? ஓநாய்களிடம் சுதந்திரத்துக்காக சேவை செய்வதுஎப்படி கேலிக்குரியததோ அப்படியானதே இதுவாகும். உண்மையான படைப்பாற்றல் சுதந்திரத்தை கலை இலக்கியம் பெறவேண்டுமானால், புரட்சிகர உணர்வுமிக்கபாட்டாளி வர்க்க இலட்சியத்தை உயர்த்திப் பிடிப்பதும், முழுமையான சமூக, பொருளாதார அரசியல்விடுதலையை ஆதரிப்பது" சுரண்டலற்ற பொருளாதார அரசியல் விடுதலையை ஆதரிப்பது,சுரண்டலற்ற பூரணத்துவ மனித குல விடுதலைக்கு உழைப்பது என்பதாலே சாத்தியமாகும.

சமுதாயத்தில்நிலவும் உண்மை நிலையை படம் பிடித்துக்காட்டும் ஒரு கண்ணாடி, என்று கலை இலக்கியத்தை கூறும் போக்கு தவறானது ஆகும்.

ஒரு கண்ணாடி முன்உள்ள உருவத்தை, அதன் பிம்பத்தை மட்டுமே காட்டுகிறது. ஆனால் உண்மையான (போலியான அல்ல) கலை இலக்கியமானது சமுதாய உண்மைகளைபிரதிபலிப்பதோடல்லாது பிரச்சனைகளை ஊடுருவி, மிகஆழமாகச் சென்று ஆராய்கிறது உண்மை நிலையை மட்டுமன்றி, மாற்றத்திற்குரிய வழி முறைகளையும் கூறுகிறது எனவே ஒருசாதாரண கண்ணாடியை கலை இலக்கியத்துக்கு உதாரணம் கூற முடியாது. (தொடரும்)

---

வர்க்க சமுதாயத்தில் நடு நிலையான சமூக விஞ்ஞானம் இருக்க முடியாது. அரசை ஒட்டியோ ஒட்டாமலோ வளரும் விஞ்ஞானப்போக்கு ஏதோ ஒரு வகையில் கூலி அடிமைத்தனத்தை பாது காக்கிறது. மாக்சிசம் கூலி அடிமைத்தனத்தை முற்றாக ஒழிக்க போர்தொடுத்துள்ளது. வர்க்க சமுதாயத்தில், விஞ்ஞானத்தில். நடு நிலமையை எதிர் பார்ப்பது, கைத் தொழிலதிபர்கள் லாபத்தைக் குறைத்து தொழிலாளர் கூலியை உயர்த்துவார்கள் என்று எதிர்பார்ப்பது போன்ற முட்டாள் தனமாகும்

—லெனின்

---



# நிலைக் கண்ணாடி

[இலங்கையின் இன்றைய அரசியல், அரசியல்வாதிகளின் உண்மைச் சொருபத்தை வெளிக்காட்டும் முகமாக "நிலைக்கண்ணாடி" என்னும் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.]

(1) செய்தி:-

கடந்த வாரம் திருமதி விவியன் குணவர்த்தனவின் அடிப்படை உரிமைகளை பறித்ததாக, ஓர் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிராக, உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து 200க்கு மேற்பட்ட பொலிசார் உயர் நீதி மன்ற நீதிபதிகளின் வீட்டிற்குமுன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

∴ நீதியை நிலைநாட்ட வேண்டியவர்களின் இன்றைய நிலை

(2) செய்தி:-

திருமதி விவியன் குணவர்தனவின் அடிப்படை உரிமைகள் பறித்தற்கு, காரணமாக இருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு அரசு பதவி உயர்வு வழங்கியதை கண்டித்து, சிறிமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

∴ 1974ம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில், 9 உயிர்களை பலிகொள்ள காரணமாகஇருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகராவிற்கு, அப்போதைய சிறிமாவோ அரசு, பதவி உயர்வு வழங்கியதன் காரணம் இறந்த 9பேரும்தமிழர்கள் என்பதாலோ?

(3) செய்தி:-

அண்மையில் திருகோணமலையில் 16 மலையக தமிழர்களின் வீடுகள் உதவி அரசாங்க அதிபர், கிராமசேவகர் தலைமையிலே. தீக்கரையாக்கப் பட்டுள்ளது.

∴ தமிழ்ப்பகுதிகளில், சிங்கள குடியேற்றம் மட்டுமே அரசாங்கத்தின் திட்டமாகும்.

(4) செய்தி:-

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாநில சுயாட்சி முறை ஒன்றை அரசாங்கம் முன்வைக்குமாயின் தமிழர் விடுதலைக் கூட்டணி. அதை ஏற்றுகொள்ளும் என்று மே 27 அன்று கூடிய டணி உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

∴தமிழர் விடுதலைக்கூட்டணியானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சிறிலங்கா முதலாளித்துவத்தினதும் "தலையாட்டி பொம்மை."

(5) செய்தி:-

வாக்கு சாவடியில் இராணுவ கோப்ரல் ஒருவர் சுட்டுகொல்லப்பட்டதைஅடுத்து, 600மேற்பட்ட இராணுவத்தினர், மாலை 5 மணி தொடக்கம் அடுத்த நாள் காலை 5 மணி வரை கந்தர் மடத்தின் 1 மைல் சுற்று வட்டாரத்தை தீக்கரையாக்கியும் தாலித்கொடி, நகைகள் ஆகியவற்றை கொள்ளை அடித்து முள்ளனர். சேதம் 7 கோடி 50 இலட்சம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

❖ மக்கள் இன்னமும் தங்களைத் தாங்களே பாதுகாத்து கொள்ளும் நிலைக்கு வரவில்லை. அதுமட்டுமல்ல இச்சூழ்நிலையில் தாக்குதலை மேற் கொள்ளும் கெரிலாக்களும் மக்களை பாதுகாக்கும் அளவிற்கு பலம் பொருந்தியதாகவும் இல்லை.

(6) செய்தி:-

சிறிலங்கா ஜே.ஆர் அரசானது, இலங்கையில் அமெரிக்க ஒலி பரப்புநிலையத்தை(VOICE OF AMERICA) நிறுவ சகல வித பேச்சு வார்த்தைகளும் முடித்து விட்ட நிலையில், அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தின் மேற்பார்வையை தமக்கு தரும் படி வேண்டினர். அதனை அமெரிக்க அரசு முழுமையாக நிராகரித்து, ஒலிபரப்பு நிலையத்தின் முழு அதிகாரங்களும் தம்மிடமே இருக்கும் என முடிவாக அறிவித்துள்ளது.

❖ ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இன்றைய நிலை "பொறியில் அகப் பட்ட யானை"

(7) செய்தி:-

அவசர கால சட்டத்தின் கீழ் இராணுவத்திற்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆயுதப் படையை சேர்ந்தவர்கள் எவரையும் கொலை செய்யலாம், அதற்கு காரணம் கேட்க முடியாது, இவர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யமுடியாது.

❖ ஈழப் பிரதேசம் ஒரு "நரபலி பீடம்"

## கோடையில் முளைத்த விதை

கடும் கோடை வெய்யிலில்
சுடும் மணல் வெளியில்
மெல்ல நடை பழகி
வெந்தழிந்த வரலாறு.

நீச்சல் பழகுதற்கு
கடலுக்குள் குதித்தமையால்
மிச்சமான ஒரு சடலம்
மெல்லக் கரை ஒதுங்க

காத்திருந்த கழுகுகள் தான்
வேட்டை கிடைத்த தென்று
கொத்திக் குதறித் தின்ன
பாசத்தால் வாடும் பெற்றமனம்

பெற்ற மன வேதனையை
புரியாத பலரிங்கே-
சுற்றி நின்று கொண்டு
சொல்கின்றார் ஒப்பாரி!

ஒப்புதல் இல்லையெனில்
சுட்டு விடும்.
கைகளைப் பிசைந்து
கண்ணீரின் காணிக்கை!

வெள்ளம் வற்றாமல் மீத
வேகமுடன் ஓட
கொள்கை விதையங்கே
கோபுரமாய் உயரும்.

உயர்ந்த கோபுரத்தின்
உச்சிக் கலசத்தில்
மயக்கும் புன்னகைச்
சிவகுமார் தான் இருப்பான்.

- குழந்தை



## ஒரு முடிவு செய்யப்பட்டு விட்டது

ஆக்கிரமிப்பாளரே
ஒரு முடிவு செய்துதான்
நாங்கள்
புறப்பட்டிருக்கிறோம்

வசந்த காலத்தின்
யௌவன நாட்களிலும்
நாங்கள்
குளிர்ந்த தென்றலை சுவாசிக்க
நீங்கள்
அனுமதித்த தில்லை

அர்த்தராத்திரிகளில்
கதவுகளைத் தட்டும்
அடக்கு முறையாளரே
எங்கள் இரத்தங்களால்
நீங்கள்
இரவுகளை சிவக்கவைத்தீர்கள்

ஆண்டாண்டு
காலமாக
ஆளும் வர்க்கமே - நீ
எங்கள் குருதியை
மதுவாக சுவைத்து
இனவெறிப் போதையில்
தள்ளாடினும்.

தாங்கள் அமைதியாக
குனிந்த போதெல்லாம்
எங்கள் முதுகினிலே
பூட்ஸ் கால்களால்
சவாரி செய்தாய்

ஜனநாயகம்
சமத்துவம்
தார்மீகம்
தலதா மாளிகை முதல்
தலைகள் உருளும
புனித பீடம் வரை
தவறாது உச்சரிக்கும்
உச்சாடன மந்திரங்கள்
இவை உடலெல்லாம்
படர்ந்த
இனவெறித் தேமலை

உலகுக்கு மறைக்க
நீ
போர்வையாய்
தெரிந்தெடுத்த
போலி அங்கிகள்
போலிப் போர்வைக்குள்-நீ
போதையில் சிரித்த போது
குண்டுகள் சீறி—எமது
குருதியில் நனைந்தன

நாங்கள் பறக்கவிட்ட
சமாதானப் புறாக்களை உனது
போரா! சமாதானமா
ஏவுகணை
தாக்கி வீழ்த்திய போது
மீண்டும் மீண்டும் பயங்கரமாய்
ஓர் அரக்கன் போல்
பற்களைக் காட்டிப்
பரிகசித்தாய்.

அன்று பொங்கி எழுந்த
இன வெறிப் பிரவாகத்தில்
கலந்து ஓடியது
எங்கள் குருதி தான்.

இ.........................
நாங்கள் வெள்ளைக் கொடியும்
கையில் ஒரு
சமரச மனுவுமாக
சந்திக்க வந்த போது
வெடி குண்டுகளை வீசி
குரூரப் புன்னகை உதிர்த்தாய்

அடிமை வெள்ளங்கள்
உடைப் பெடுத்து
பெருகும் போதெல்லாம்
போசடி மஸ்தான்கள்
அகிம்சை மண்ணால்
அணைகட்டித் தடுத்தார்கள்

மஸ்தான்களால்-நாங்கள்
நிராயுத பாணியாகி
நிலை தளர்ந்து நின்றபோது
வெடி குண்டு வீசி
வெடிச் சிரிப்பை உதிர்த்தாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை வெடிக்கும் போது
குமுறுது வெடிப்பதில்லை
உனது
அக்கிரம சாட்டைகளால்
தழும்பேறிய
அனைத்து மக்களும்
குமுறுகின்றார்கள்

ஆம்

ஒரு முடிவு
செய்து விட்டோம்
நாங்கள்
வாழ வேண்டுமானால்
போராட வேண்டும்.

அக்கிரமச் சாட்டைகளும்
அகிம்சை உபதேசங்களும்
இங்கே
சீறி வரும் உணர்வுகளை
சீனச் சுவராய்
தடுக்கப் போவதில்லை.

நாங்கள்
களத்து மேட்டுக்கு
கர்ஜித்து
கிளம்பும் போது
உனது
மூலதன வசந்தத்தின்
இலையுதிர் காலம்
ஆரம்ப மாகின்றது.

ஆக்கிரமிப்பாளரே
மக்களது
நீதிமன்றங்களில்—நீங்கள்
தண்டிக்கப்படும்போது
துப்பாக்கியால்;எழுதப்பட்ட
கறை படிந்த தீர்ப்புகள்
பொசுக்கப்படும்.

"மக்களே எஜமானர்கள்
மக்களே நீதிபதிகள்,,—என்ற
வன்மையான உண்மைகளை
வன்முறை துணை கொண்ட—
வரண்ட வர்க்கமே
உனக்கு இங்கும்
நினைவூட்டுவோம்.

- செவ்வொளி

---

## ஜனாதிபதி, பிரதமருக்கு தந்தி

காந்தியவாதிகளை விடுதலை செய்யக்கோரியும், பயங்கரவாத தடைச் சட்டங்களை வாபஸ்பெறக் கோரியும், இங்கிலாந்து,சுவீட்சர்லாந்து, மனித உரிமைக்கழகங்கள் சிறிலங்கா ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அவசரத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளன.

---

## இலங்கைத் தூதரகத்தில் மனு கையளிப்பு

600க்கு மேற்பட்ட ஈழத் தமிழர்களும், ஜெர்மன் பிரஜைகளும் இலங்கையில் நடைபெறும் அரச பயங்கரவாதங்களையும், மனித உரிமை மீறல்களையும் கண்டித்து, ஜெர்மன் தலைநகரான "பொன்" இல் நீண்டதொரு ஊர்வலத்தை நடாத்தினார்கள். ஊர்வல முடிவில் இலங்கை தூதுவரிடம் மேற்கண்ட விடயங்களை கண்டித்து ஓர் மனு கையளிக்கப்பட்டது.



# எதற்குத் தனி நாடு

சிங்களவர் உனது உடமைகளைக் கொள்ளை அடித்து விட்டார்கள் என்பதாலேயோ, அரசாங்க உத்யோகத்திற்குச் சிங்களம் படிக்க வேண்டுமென்பதாலேயோ, சிங்களவன் யாழ்பாணத்திலேயும், திருகோண மலையிலும் வந்து வாழ்கிருன் என்பதாலேயோ,பாட்டன் காலத்தில் கொழும்பில் கடை போட்டது மாதிரி இப்போது போட முடியவில்லை என்பதற்காகவோ, நாங்கள் தனிநாடு கேட்டுப் போராட வேண்டிய அவசியமில்லை. நீஅரசாங்க உத்யோகத்தில் இருந்து கொண்டு உன்னிடம்உதவிக்கு வரும் பாமர மக்களை எனக்கு நேரமில்லை. இன்று போய் நாளைவா என்று ஆணையிடுவதற்குத் தேவையான அந்த மேசைக்கும், கதிரைக்கும் சிங்களவன் போட்டி போடுகிருன் என்பதற்குத் தனிநாடு கேட்டு போராட வேண்டிய அவசியமில்லை. உனது கள்ளக் கடத்தல் தோணியைக் கடற்கரையில் மறித்துச் சோதனை போடுகிருர்கள். என்பதற்காகத் தனிநாடு கேட்க முடியாது.

நான் தமிழன் எனக்கு ஆங்கிலம்தான் பேசத் தெரியும், சிங்களம் தெரிய வேண்டியதில்லை என்பதற்காகத் தனிநாடு கேட்க கூடாது. உனது வறுமை நிலைக்கு சிங்களவன் தான் காரணம் என்று யாரோ கூறிவிட்டார்கள் என்பதற்காகத் தனிநாடு கேட்டு போராடக்கூடாது. உனது லாபத்தைச் சிங்களவன் கெடுக்கிருன் என்பதற்காகத் தனி நாடு கேட்கக் கூடாது, உனது விட்டின் பின்னல் உள்ள அரசமரத்தைப் புத்த கோயிலாக்கிவிட்டார்கள் என்பதற்காகத் தனிநாடு கேட்கக்கூடாது,"

'இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் வறுமையைப் போக்கிச் செல்வத்தை வளர்க்கவும்,தங்கள் மொழியை, கலாச்சாரத்தை, பாரம்பரியத்தைப் பேணிக் காத்து வளர்க்கவும் தங்கள் நிலத்தில் ஒரு அரசை நிறுவ விரும்புகிருர்கள்,

இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தமிழர்கள் என்ற ஒரு காரணத்தால் நாடற்றவர்களாகக் கருதப்பட்டு, அல்லல்பட்டு, இனனலுற்று' அகதிகளாக ஆக்கப்பட்டுக் கப்பலில் ஏற்றப்படுகின்றனர். அவர்களுக்கு இருக்க இடமில்லை.உண்ண உணவில்லை'

செய்வதற்குத் தொழில் இல்லை இவர்களுக்கு இடமும், உணவும், தொழிலும் கொடுக்க வேண்டும தமிழன என்று தலைநிமிர வைக்க வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் கட்சி யென்றும், சாதி யென்றும், சமயமென்றும் ஊரென்றும், தெருவென்றும் பிரிந்து சொந்த மண்ணில் எதையும் சாதிக்க முடியாமல், அந்நிய மண்ணில்கையேந்தி நிற்கிறார்கள். இதையொரு முடிவுக்குக் கொண்டுவர தமிழனுக்கு ஒரு அரசு வேண்டும்

சுதந்திரம், ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு,மனிதனைமனிதன் சுரண்டும் சுதந்திரத்தை வளர்த்துக் கொண்டு, அதிகார வெறி பிடித்துச் சொந்த மண்ணிலேயே தமிழனை அந்நியனுக்குகிருன் தமிழன். இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

தமிழன் நாகரிகம் என்று கூறிக் கொண்டு வெறும் போலியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்பாடுகளையும், போட்டியையும், பொறுமையையும் வளர்த்து ஏகப்பட்ட பொறுப்புகளைத் தலையில் வைத்துக் கொண்டு மண்ணோடு மண்ணாக அழுந்திப்போய்க் கிடக்கின்றான். இதிலிருந்து அவனை விடுவித்துத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பொருளாதாரத் திட்டத்தை அமைத்து வழிநடத்த ஒரு சமதர்ம அரசு நிறுவ வேண்டும்.

சமுத்திரத்தை ஆட்கொண்டு, சந்திரனை வென்று அணுவைத் துளைத்து விண்ணைப் பொழிய வைக்கிறான் மனிதன். இந்த யுகத்தைத் தமிழனை அடைய வைக்க, அவனை வழிநடத்த ஒரு அரசு வேண்டும். அதை நிறுவ மண் வேண்டும். பூமி வேண்டும். இதற்குத்தான் நீ போராட வேண்டும. வேலெடுக்க வேண்டும்.

'இதற்கு யார் கரங்கள் வேலெடுக்கும்?''

''உண்டு கொழுத்து திரண்டு போய்க்கிடக்கும் கரங்கள் இதைத் தொடாது; இதைத் தொடவும் முடியாது.

உழைத்து உழைத்து முறுகிப் போன கரங்கள் தான் இதை முதலில் எடுக்கும்.

ஏர் பிடித்துக் காய்ந்த கரங்கள் தான் இதை எடுக்கும்.

பேனா பிடித்துச் சோற்றுக்குஏங்கும் வெற்றுக்கரங்கள் தான் இதை எடுக்கும்.

இனத்தின்வீழ்ச்சியை நினைத்து நினைந்துத் துடிக்கும் கரங்கள் தான் இதை எடுக்கும்.

நீ முதலில் அவர்களைத் தேடி அவர்களுக்கு முதலிடம் கொடு. இதற்கு சிந்தும் இரத்தம் அவர்களிடம் தான் உண்டு. இந்த அரசை தாங்கும் இதயம் அவர்களிடம் தான் உண்டு. அவர்களுடைய எழுச்சிதான் இந்த அரசு.

நன்றி: லங்கா ராணி

---

மக்களிடையே உள்ள சித்தாந்த ரீதியான அல்லது முரண்பாடான பிரச்சனைகளை தீர்க்க கூடிய ஒரே வழி ஜனநாயக ரீதியான முறையாகும். கலந்துரையாடல், விமர்சித்தல் ஆதரவோடு வேண்டுதல், கற்பித்தல் ஆகிய வழிகளை கையாளுவதே அல்லாது வன்மை, அடக்குமுறை ஆகிய வழிகளை கையாளக் கூடாது. —மா.ஓ.

∴ ∴ ∴

தேசிய இனம் என்பது சரித்திர பூர்வமாக, சரித்திரத்தின் போக்கில் வளர்ந்துள்ள, மக்களின் ஸ்திரமானதொரு சமூகம். நான்கு பிரதானமான குண நிசயங்களை அடிப்படையாகக் கொண்டது அது. அதாவது பொதுமொழி, பொதுவான நிலப்பரப்பு, பொதுவான பொருளாதார வாழ்வு, குறிப்பிட்ட பொதுவான தேசியக் கலையாகப் பிரதிபலிக்கும் பொதுவான மனோபாவம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பது.

—ஸ்டாலின்



குறுநாவல்

# இரவல் தாய்நாடு

—செ. யோகநாதன்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

''உண்மைதான் நான் இங்கேயே தங்கி, எனது தேசத்தின் விவசாய அபிவிருத்திக்கு பாடுபடவே நினைக்கிறேன், நான் பிறந்தமண்ணுக்கே எனது உழைப்பு சொந்தமாகவேணும். எனது அப்பு பயிர் செய்த வயலிலே என்னுடைய ஆசை; கனவு; எல்லாம்...''

நான் அவனைப் பார்த்தேன். தீர்க்கமான முடிவினை வார்த்தைகளோடு வெளிப்படுத்திற்று முகம், வேட்டித்தலைப்பை சிறிது தூக்கி முழங்காலளவில் மடித்துக்கட்டிக் கொண்ட அருள் தன்னை மறந்த உற்சாகத்தோடு ஆங்கிலத்திற்கு மாறினான்:

''எத்தனை இரவுகள். மில்வாக்கியில் எனது வீட்டின் குளிர்ந்த அறையினுள்ளிருந்து ஜன்னல் வழியாக வானத்தைப் பார்த்து நான் ஏங்கிக் கொண்டிருந்திருக்கிறேன் தெரியுமா? ஒரு அனாதையைப்போல, தாயை இழந்த மழலைக் குழந்தையைப்போல் வெளியே நேரமாக ஆகக் கவிழ்ந்து வீட்டுப் பாதைகளை மூடுகின்ற பனிபடலங்களைப்போல் என்னை இங்கே கட்டியிருக்கிற எல்லாத்தளைகளையும் அறுத்தெறிந்து விட்டு கிராமத்தின் வைக்கோல் போர்களில் நிலை மறந்து உருள வேண்டுமென்ற ஆசை மனதினுள்ளே பீறிட்டெழும்... இந்தக் கிராமத்தை, இந்த மண்ணை, இதன் வறுமையை, அறியாமையை, சச்சரவுகளை எண்ணி எனக்குள்ளேயே வெதும்பியிருக்கிறேன்... என்னவோ ஒரு வெறுமை......'

''அப்படியானால் இனி நிரந்தரமாக இங்கேயே...'' நான் இழுத்தேன்.

நிரந்தரமாக இங்கேயே தங்கி உத்தியோகம் பார்க்க அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். இங்குள்ள விவசாய முறையினை நுட்பமாக ஆய்வு செய்த பின்னர், இந்த மண்ணிற்கு ஏற்றவகையில் எனது வழிமுறைகளை வகுத்துச் செயற்பட வேண்டும். இதற்கு இந்த கிராம இளைஞர்களின் உதவி எனக்கு அவசியம். இரண்டு நாட்களுக்கு இந்த ஊரிலேயே ஓய்வு. நாளை கழித்து மறுநாள் கொழும்பிற்குப்போய் அமைச்சு அலுவலகத்தில் பேசி முடிவெடுக்க வேண்டும், அவசரமாக...'' பதினைந்து வருஷ காலமாக உயர் பீடத்திலே சகல வசதிகளோடு மிருந்த இவனது முடிவு என்னுள்ளே பலகேள்விகளை எழுப்பிற்று. அவனது முடிவின் பலாபலன்கள் எத்தகையதாக அமையுமென்பதை என்னால் மேலோட்டமாகக்கூடக் கற்பனை செய்து கொள்ளமுடியவில்லை; மிகவும் சாதாரண பாவத்திலிருந்தது அவனது முகம்.

அன்று மாலையிலே சில இளைஞர்கள் அருளைச் சந்திக்கவென வந்தார்கள் உற்சாகமான முகங்கள் இளஞ்சூரியனைப்போல, இதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயதிலே படிப்பையும், குறும்புகளையும், விளையாட்டுக்களையும், வளரிளம் பருவத்துக் கனவுகளையும் தவிர வேறெதையும் அறியாதவர்களாக நாங்கள் வாழ்ந்திருந்தோம். இதோ எங்களின் முன்னாலுள்ள இளைஞர்களின் சிந்தனைக்குள்ளே உலகம் ஒரு சின்னப்பந்தாகி உருள்கின்றது. தமிழ் மாணவர்கள், இலங்கை இளைஞர்கள், அமெரிக்க வாலிபர் கிளர்ச்சிகள், நீக்ரோக்கள் போராட்டம் என்பனபற்றியெல்லாம் அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் அக்கறை தொனிக்கிற குரலிலே பேசிக் கொண்டார்கள். அவர்கள் சொன்னவற்றிலே பல விஷயங்கள் இப்போதுதான் நான் அறியநேர்ந்தவை என்பதனை நான் ஒப்புக் கொள்ளவே வேண்டும். ஆப்பிரிக்க நீக்ரோமக்களின் இன்றைய நிலை பற்றிய சில புத்தகங்களினை எனது வீட்டிலே வைத்துவிட்டு வந்ததற்காக மனம் வருந்திக்கொண்டான் அருள். அடுத்த முறை தவறாது கொண்டு வருவதாகச் சொன்னான். இலங்கையைப்பற்றி அருள் முற்றுமே அறிந்து கொள்ளாத பல புதிய விஷயங்களை, இக்கொடுமைகளெல்லாம் தனக்கேதான் நடந்தன என்று சீறுகிற ஆவேச உணர்வினோடு எடுத்துரைத்துக் கொண்டிருந்தான் செல்வராசா. கறுப்புநிறமான அடர்ந்தசுருள் முடியுடனான, முன் பல்லில் ஒன்றையிழந்த, உயர்ந்த தோற்றமுள்ள தெளிவாக உரையாடும் திறனுள்ள ஆளைஞன் செல்வராசா.

"உங்களுக்கு இது தெளிவாகத் தெரிந்திருக்க நியாயமில்லை. உலகத்திலே எந்த நாட்டிலாவது இத்தகையதொரு வஞ்சனையான திட்டமிருக்கிறதோ எனக்குத் தெரியாது. இலங்கையிலே கல்வித்துறையைப்பொறுத்தவரை தமிழர்களே முன்னணியில் நிற்கிறார்களென்றும், அவர்களே டாக்டர்களாயும், எஞ்சினியர்களாயும், ஏனைய துறைகளுக்கும் தெரிவாகி உயர் பதவிகளை ஆக்கிரமிக்கிறார்களென்றும் ஆட்சியாளர்களால் கருதப்பட்டு, கல்வியமைப்பில் மாறுதல் கொண்டு வரப்பெற்றது. இதைத் 'தரப்படுத்தல் முறை என்று கூறினார்கள். மாவட்ட அடிப்படையிலான கோட்டாமுறையில் இனரீதியாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். ஒரு மாவட்டத்தில் 180 புள்ளிகள் எடுத்த மாணவன் தெரிவானபோது 210 புள்ளிகளெடுத்தவேறொரு மாவட்ட மாணவனுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டது. இது தமிழ் இளைஞர்களை நம்பிக்கையின்மையின் விளிம்பிற்கு கொண்டு சென்றது..." செல்வராசாவின் முகத்திலே பீறிட்ட ஆத்திர உணர்வு இப்போது அருளின் முகத்திலே படியத் தொடங்கிற்று. அவனது தீட்சண்யமான கண்களில் நிறைய வினாக்கள் தொங்கின.

"1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புத் திட்டம் தமிழரை இரண்டாந்தரப் பிரஜைகளின் நிலைமைக்குத் தள்ளிற்று. தமிழ் இளைஞர்கள் இந்த திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்தனர். இவர்களின் மேல் அடக்குமுறைகள் கொடூரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு எவ்விதமான விசாரணையும் இன்றி சிறையில் வைக்கப்பட்டனர். சிறையில் சொல்ல முடியாத சித்திர வதைகள், அரை உயிரோடும், சேதமுற்ற மனதோடும் நிரந்தரமாகவே ஊனமுற்றுமே இவர்களில் பலர் சிறையிலிருந்து வெளியே வந்தனர். சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கென்று அழைத்து வரப்பட்ட இளம்பெண் ஒருத்தி நிர்வாணமாக்கப் பெற்று எல்லாக் கொடுமைகளுக்கும் ஆளானாள். இன்னொரு இளைஞனின் ஆண் குறியை மோட்டார்சைக்கிளின் புகைபோக்கிக்குள் புகுத்திவிட்டு மோட்டார் சைக்கிளை ஸ்ராட்' பண்ணினான் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், இதனால் அந்த இளைஞன் தனது ஆண்மையையே இழந்து விட்டான்..."



செல்வராசாவின் குரல் தளதளத்தது, அந்த நிகழ்ச்சிகளில் மனமழுந்தி சில நிமிஷங்கள் மௌனமாயிருந்தான். நிலவிய மௌனம், எல்லோரது மன நிலையையும் உணர்த்தியது.

' 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த இம் மகாநாடு குழப்பத்திற்குள்ளாக்கப் பட்டது. போலீசார் மக்களை அடித்து விரட்டினர்...பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். போலீஸ் அட்டூழியத்தினால் ஒன்பது பேர் அதே மைதானத்தில் உயிரிழந்தனர். முதல்நாள் திருமண வீடாயிருந்த யாழ்ப்பாணம் மறுதினம் மிலேச்சர்கள் தாக்கிய நகரம் போல சோகமே உருவெடுத்திருந்தது....ஏற்கனவே கசப்புணர்வின் எல்லைக்கே போய் விட்ட இளைஞர்களை இச்சம்பவம் பொறுமையினையே இழக்க வைத்தது, சிறையிலிருக்கையில் சிங்களக் கிளர்ச்சியாளர்களை இவ்விளைஞர்கள் சந்தித்தனர்... இதன் விளைவாக வன்முறையைக் கையாளத் தொடங்கினர், ஆனால் காரணத்தை அறிந்து அதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதற்கு எண்ணெய் ஊற்றி எரியவைத்து ஆதாயம் பெறுவதிலேயே ஆட்சியாளர்கள் கவனமாயிருந்தனர்..."

"அப்படியானால் புதிய அரசாங்கம் இவைகளைத் தீர்க்க எவ்வித முயற்சியுமே எடுக்கவில்லையா?" என்று கேட்டான் அருள்.

அலட்சியச் சிரிப்பொன்று செல்வராசாவின் முகத்திலே உதிர்ந்தது.

"அப்படிச் சொல்லிக் கொண்டு தான் ஆட்சியைப் பிடித்தார்கள் ஆனால் நிலைமையோ முன்பை விட இப்போது மோசமாகிவிட்டது...'

அருள் எதையோ சொல்லவாயெடுத்தான். அதே நேரத்தில் வெளியே நாய்கள் பயங்கரமாகக்குரைத்துக்கொண்டிருந்தன. நான் எழுந்து வெளியே போனேன். மனம் திக்கென்றது. வாசலிலிருந்து சிறிதுதூரம் தள்ளி போலிஸ் வான் ஒன்று நின்றது. அவ்வீட்டைச் சுற்றியிருந்த வேலியின் ஓரமாக வீட்டைச் சுற்றி, யூனிபோம் அணியாத சிலர் துப்பாக்கிகளோடு சுடுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தனர். என்ன செய்வதென்று தெரியாது திகைத்துப்போய் நின்ற என்னை செல்வராசாவின் குரல்தான் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

செல்வராசா மெலிதான புன்னகையோடு சொன்னான்.

"இதைப் பார்த்துப் பயப்படாதீங்க போலீஸ் என்னைத் தேடித்தான் வந்திருக்குது..."

செல்வராசாவின் தகப்பன் முருகேசுவை அடையாளங் கண்டு கொண்ட அருள் ஆதரவாக அவரைப்பார்த்தான், கறுத்த ஆஜானுபாகுவான் தோற்றம, திருநீறணிந்து பளீரென்கிற நெற்றி, சிறியகுடுமி, கடுக்கண் அணிந்த காது வேட்டிமட்டுமே உடுத்து, தோளில்வெள்ளைச்சால்வை, அவர்தான் ஊரிலுள்ள அம்மன் கோவில் பூசகர் இப்போது அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இருந்த காலம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனமேடையில் சுவடுபதித்து நடந்தது... அம்மன் கோவிலில் பங்குனிப் பொங்கலன்று கிராமம் முழுவதுமே கூடி நிற்கும். அம்மன் கோவிலின் பூசகர் முருகேசு உடுக்கையை கையில் எடுத்து மெதுவாகத்தட்டியவுடனே எங்குமே மௌனம் ஆட்சிசெய்யும் "அம்மாள் ஆச்சியே என்ற கணீரென்ற குரல் வலிமைமிகு மந்திரமாகி எல்லோரையும் அது போலக்கூறி கைகுவியவைக்கும். பிறகு அவர் பாடுவார் உடுக்கையும் அவரோடு சேர்ந்து பாடும், உடலையே சிலிர்க்க வைக்கிற விதத்தில் அந்த உடுக்கையொலி இன்னிசையால், கெஞ்சலாய், உரிமையாய் தோத்திரங்களாய் அம்மனைப் பணிந்து மெல்லென ஓயும்... அது சாதாரண உடுக்கைதான். ஆனால் முருகேசுவின் கைவிரல்களில் எல்லா உணர்வுகளையும் நெகிழ வைத்து இன்னிசைப்பேரியக்கமாக அது செயற்படுகிறது முருகேசு வெறும் பூசாரியல்ல சத்தியவான் யாருமே பழிக்காத சாது அவரை நிமிர்ந்து சினக்கயாராலே முடியும்?

"என்ன நீங்கள்? இப்பிடிக்கலங்கிப் போயிட்டீங்கள்... உங்களைப் போல ஒரு நல்ல மனிஷருடைய பிள்ளைக்கு எக்காலமும் ஒரு கஷ்டமும் வரமாட்டாது. செல்வராசாவைக் கூட்டிக்கொண்டு போன போலீஸ்காரர் எப்பிடியும் அவனைத் திருப்பிக்கொண்டு வந்துவிடத்தானே வேணும், ஒரு குற்றமுமே செய்யாத இவனை அவர்கள் என்ன செய்யமுடியும்?'

முருகேசு வெறித்த பார்வையோடு மௌனமாயிருந்தார். அருளின் சொற்கள் அவரளவில் வெறும் ஆறுதல் வார்த்தைகளாகி காற்றோடு கலந்து போயின என்பதனை மாற்றமுறாத முகம் தெளிவாகவே சொல்லிக் கொண்டிருந்தது. சிவா முருகேசுக்கு தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"போலீஸ்காரர் பொதுமக்களோடை நடந்துகொள்கிற முறை நீங்கள் நினைக்கிறது போல இந்த நாட்டில் இல்லை. அவர்கள் தங்களுடைய கையிலே சட்டத்தை எடுத்துக் கொண்டு நடக்கிறார்கள்... அவர்கள் எதையும் பேசலாம்...எவருக்கும் என்ன தண்டனையும் கொடுக்கலாம், பள்ளிக்கூட மாணவனிலே இருந்து எம். பி. வரை இந்தப் பிரதேசத்திலே போலீசாராலே மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள், இதனால் தான் போலீஸ்காரர் கையிலே பிடிபட்டது என்றவுடனேயே எவரும் பயப்பட்டு நடுங்கவேண்டியிருக்கிறது.

(தொடரும்)

---

**திருத்தம்:- கோடையிலே மூவாத்த விதை**

பக்கம் 16

16-ம் வரிக்கு அடுத்தாக
ஒப்புக்காய் அழுவதனை
விட்டுவிடும்—மன,

20-ம் வரிக்கு அடுத்தாக
வைகை தோற்று விடும்
வற்றாது உணர்வு வெள்ளம்

---

ஈழமாணவர் பொது மன்றத்திற்காக V. I. தாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. தொடர்பு முகவரி: போஸ்ட் பாக்ஸ் நெ. 4967 சென்னை-17. அச்சிட்டது: ஜெய் காளிதாஸ் பிரஸ், சென்னை-24.

---

## உங்கள் கவனத்திற்கு

மாணவத் தோழர்களே நண்பர்களே, ஈழ முழக்கத்திற்கான கவிதை, கட்டுரை, மற்றும் துணுக்குகள் தங்களிடம் இருந்து எதிர்பார்க்க படுகின்றன. உங்களது படைப்புகள், முற்போக்கானவையாகவும் புதியதோர் சமுதாயத்தைப் படைக்கப் உற்சாக மூட்டுபவையாகவும் இருப்பது விரும்பத் தக்கது, அத்துடன் "ஈழ முழக்கம்" பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்களும் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இது எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உற்சாகத்தை கொடுக்கும் என்று எதிர்ப்பார்க்கின்றோம், உங்களது ஆக்கங்கள் விமர்சனங்களை

**ஈழமாணவர் பொது மன்றம்**
**த. பெ. எண் 4967, சென்னை-17**

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

---

## ஈழ முழக்கம் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு சந்தா | 15 00 |
| ஆறு மாத சந்தா | 7 50 |
| தனிப்பிரதி | 1 00 |

சந்தா தொகைக்கு தகுந்த போஸ்டர் ஆர்டர் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**எம். லூகியதாசன்**
தபால் பெட்டி எண். 4967
சென்னை—600017

---

(அட்டையின் 2-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை கதிகலங்கிடச் செய்வதையும் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகின்றோம்.

ஈழ மக்களுக்கெதிராக நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், உங்களுக்காக நீங்கள் வெட்டும் சவக்குழி என்பதை ஞாபகத்தில் வையுங்கள். நீங்கள் மோதுவது ஒரு சில பயங்கரவாதிகளோடல்ல. முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிச ஈழத்தை அமைத்திடத் துடிக்கும் 40 இலட்சம் மக்களுடன் மோதுகின்றீர்கள் நாலாயிரம் மக்களையோ அல்லது நாலு லட்சம் மக்களையோ, கிராமங்களையோ, நகரங்களையோ நீங்கள் அழிக்கலாம், துவம்சம் செய்யலாம். ஆனால் மக்கள் மனதில் கொழுந்து விட்டெரியும் விடுதலைக்கனலையோ, அவர்களது, கொள்கைகள், இலட்சியங்களையோ உங்களால் எரித்துவிட முடியாது. எனவே தான் உங்களை மீண்டும் எச்சரிக்கின்றோம் காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறைகளை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையேல் எதிர் விளைவுகள் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்பது மாத்திரமல்ல அவற்றை உங்களால் கட்டுப்படுத்த முடியாமலுமிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

PRIVATE CIRCULATION ONLY

## இரண்டு வார்த்தைகள் சொல்ல......

இலங்கை ஜனாதிபதி இந்தியா விஜயம் செய்த போதும், இந்திய வெளியுறவு மந்திரி இலங்கை விஜயம் செய்தபோதும் இலங்கையிலிருக்கும் நாடற்றோர் பிரச்சனைக்கு முடிவு கண்டு விடுவார்கள் என்று எதிர் பார்த்தோம் மாநாடு கூடியது; மாதலைவர்கள் கூடினார்கள். கோரிக்கை மகஜர்கள் சமர்ப்பித்தார்கள். நாடற்றோர் பிரச்சனைக்கு தீர்வு காணத்தான் வேண்டும். குடியுரிமை வழங்கத்தான் வேண்டும் என்றார் ஜயவர்த்தன; இவர் பிரச்னைக்கு தீர்வு கண்டு விடுவதாக தெரிவித்திருக்கிறார் என்றார் இந்திய வெளியுறவு மந்திரி. 'புலிவருது புலிவருது என்று ஒன்றும் நடக்கவில்லை. நாடு கடத்தப்பட்டு வருகிறவர்கள் வந்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்; நாடற்றவர்கள் நாடற்றவர்களாகவே இருக்கிறார்கள். இனி எப்போது 'விஜயங்கள்' மேற்கொள்வார்கள்—இவர்களைப் பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லி வைக்க? —ராஜு"

G.U.E.S.
Post Box No 4957
T. Nagar,
Madras-17

PRINDTED MATTER

பெயர் ........................................

விலாசம் ........................................

........................................

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்